# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THE NEW INDIAN EXPRESS DATED 16.04.2025

EXPRESS READ

### Pondy university hosts seminar on mental health of senior citizens

Puducherry: Pondicherry University hosted a two-day national seminar on 'Intergenerational Bonding and Ageing in Place: Pathways to Understand Geriatric Mental Health', emphasising the growing need to prioritise elderly mental health. Organised by the Department of Social Work, in collaboration with the National Institute of Social Defence, Ministry of Social Justice and Empowerment, the event brought together experts, policymakers, academics, and practitioners from across India. ENS

DINAMALAR DATED 16.04.2025

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தேசிய கருத்தரங்கம்

**புதுச்சேரி, ஏப். 16–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமூக பணித் துறை, சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளி, மத்திய அரசின் தேசிய சமூக பாதுகாப்பு நிறுவனம் சார்பில் 'தலைமுறைகளை இணைக்கும் உறவுகள் மற்றும் முதியோரின் மனநலத்தைப் புரிந்து கொள்ளும் பாதைகள்' தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

சமூக பணித்துறை தலைவர் சங்கர் நாராயணன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் ஷாஹின் சுல்தானா நோக்கவுரை ஆற்றினார். பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு கருத்தரங்கை துவக்கி வைத்து, முதியோரின் மனநல தேவைகளை கல்வி மற்றும் கொள்கை விவாதங்களின் மூலமாகப் புரிந்து கொள்வது அவசியமானது என்றார்.

ஹைதராபாத் ஹெரிடேஜ் அறக்கட்டளை இயக்குனர் கணகதரன் முதியோர் காப்பீட்டுத் திட்டங்களின் சட்டவியல், பரிந்துரைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

நிம்ஹான்ஸ், பெங்களூரு நிறுவன மனநல சமூகப் பணித்துறை பேராசிரியர் திருமூர்த்தி, முதியோர் பராமரிப்பின் உளவியல் பார்வையை முன்வைத்தார். ஜிப்மர் சமூக மருத்துவத் துறையின் ஜூனதா பானு, சமூக ஆய்வுகளின் அடிப்படையில் முதியோர் நலன் குறித்து பேசினார். இதில், அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், சமூகத் துறையின் முன்னணி நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

DINAMALAR DATED 16.04.2025

# புதுச்சேரி பல்கலை.,யில் குடிநீர் நிலையம் திறப்பு



■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இந்தியன் வங்கி சார்பில், அமைக்கப்பட்ட சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தினை பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு திறந்து வைத்தார். அருகில் இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் வெங்கட் சுப்ரமணியன், துணை மண்டல மேலாளர் சுப்ரமணி.

**புதுச்சேரி, ஏப். 16–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சுத்தகரிக்கப் பட்ட குடிநீர் நிலையம் திறப்பு விழா நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் வெள்ளி விழா வளாகத்தில் அமைந்துள்ள மனித வியல் மற்றும் சமூக அறிவியல் பள்ளியில், இந்தியன் வங்கி சி.எஸ்.ஆர்., திட்டத்தின் கீழ் ரூ. 5 லட்சம் செலவில் ஒரு மணி நேரத்திற்கு 250 லிட்டர் திறனுடைய சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நடந்தது.

பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை திறந்து வைத்தார்.

இதன் மூலம் மாணவர்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்கப்படும்.

நிகழ்ச்சியில், இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் வெங்கட் சுப்ரமணியன், துணை மண்டல மேலாளர் சுப்ரமணி, இந்தியன் வங்கியின் புதுச்சேரி பல்கலைக் கழகக் கிளை மேலாளர் விஸ்வஜித் உட்பட பலர் பங்கேற்றனர்.

THILLAI MAIL DATED 16.04.2025




RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
செய்திக்கு:94426 34795
மலர் : 4 இதழ் : 303
VOLUME: 4 ISSUE: 303
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (16-4-2025) புதன்கிழமை
PUDUCHERRY(16-4-2025) WEDNESDAY




## தலைமுறைகளை இணைக்கும் உறவுகள் மற்றும்

# முதியோரின் மனநலத்தை புரிந்துகொள்ளும் பாதைகள் குறித்த இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம்

புதுச்சேரி, ஏப். 16

புதுவைப் பல்கலைக்கழகத்தின் சமூக பணித்துறை, சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளி மற்றும் இந்திய அரசு, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் தேசிய சமூக பாதுகாப்பு நிறுவனம், புதுடெல்லி ஆகியவை இணைந்து "தலைமுறைகளை இணைக்கும் உறவுகள் மற்றும் முதியோரின் மனநலத்தைப் புரிந்துகொள்ளும் பாதைகள்" என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கத்தை ஏப்ரல் 11 மற்றும் 12 தேதிகளில், புதுவைப் பல்கலைக்கழகத்தின் கலாசார மண்டபத்தில் நடத்தியது.

வயதுமுதிர்தல்என்பதுதவிர்க்கமுடியாதஒருஇயற்கை நிலையாகும். இது உடல், மனம் மற்றும் சமூகத்திலான பல மாற்றங்களை கொண்டு வருகிறது. உடல்நல சிக்கல்கள் பெரும்பாலும் கவனத்திற்குரியவையாக இருந்தாலும், முதியோரின் மனநலப் பிரச்சனைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த தேசிய கருத்தரங்கம், முதியோரின் உளநலம் குறித்து விவாதிக்க ஒரு மேடையாக அமைந்தது. இதன்மூலம் அவர்களின் மனநலப் பாதிப்புகள், அதன் சூழ்நிலை மற்றும் தலைமுறைகளுக்கு இடையேயான உறவுகளின் முக்கியத்துவம் பற்றிய ஆழ்ந்த பார்வை வெளிப்படுத்தப்பட்டது.

கருத்தரங்கத்தின் துவக்க அமர்வில், சமூக பணித்துறை தலைவர் பேராசிரியர் சங்கர் நாராயணன் வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கத்தின் நோக்கங்கள் மற்றும் பின்னணியை கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஷாஹின் சுல்தானா விளக்கினார்.

கருத்தரங்கு தொடக்க உரையை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு வழங்கினார்.

ஹைதராபாத்திலுள்ள ஹெரிடேஜ் அறக்கட்டளையின் இயக்குனர் கணகதரன் முதியோர் காப்பீட்டுத் திட்டங்களின் சட்டவியல் பரிந்துரைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்தார். நிம்ஹான்ஸ், பெங்களூரு நிறுவனத்தின் மனநல




சமூகப் பணித்துறையைச் சேர்ந்த திருமூர்த்தி முதியோர் பராமரிப்பின் உளவியல் பார்வையை முன்வைத்தார். அதே நிறுவனத்தின் வயோதிக பிரிவுத் தலைவர் சிவகுமார் முதியோர் மனநலத்தில் தொற்றுநோயியல் பார்வைகள் மற்றும் தொண்டு அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் வகிக்கும் பங்கு குறித்து உரையாற்றினார்.

இறுதியாக ஜிப்மர் சமூக மருத்துவத் துறையின் சமூக அறிஞர் டாக்டர் ஜுனதா பானு, சமூக ஆய்வுகளின் அடிப்படையில் முதியோர் நலன் குறித்த முக்கிய குறிப்புகளை வழங்கினார்.

இரண்டு நாட்களில் முதியோர்: இயற்கை, செயல், சவால்கள், இந்தியாவில் முதியோர் சிக்கல்கள்: கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், பழங்குடியினங்களில் முதியோர் வாழ்க்கை, பெண்கள் மற்றும் முதியோர்: பிரச்சனைகள் மற்றும் பாதிப்புகள், தலைமுறைகளுக்கிடையேயான உறவுகள் ஆகிய 5 அமர்வுகள் நடைபெற்றது.

புதுவைப் பல்கலைக்கழகத்தின் கலாசார இயக்குநர் பேராசிரியர் கிளெமெண்ட் சாகயத்யா லூர்தஸ், இலக்கிய உலகத்திலிருந்து மேற்கோள்கள் கொண்டு முதியோரின் நிஜ வாழ்க்கை பிரச்சனைகளை ஒப்பிட்டு உரையாற்றினார். பதிவாளர் (தற்காலிக) ராஜனீஷ் பூத்தானி, கருத்தரங்கத்தின் தலைப்பின் தாக்கத்தையும் அதன் சமகாலப் பொருத்தத்தையும் பற்றி பேசினார். நிகழ்ச்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த தேசிய கருத்தரங்கில், நாடு முழுவதிலம் இருந்து 175க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், கொள்கையமைப்பாளர்கள், மற்றும் சமூகத் துறையின் முன்னணி நிபுணர்கள் கலந்துகொண்டனர்.